RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 209 | ஆகஸ்டு.4 2026 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# “விவசாய விரோதி விஜய் ஆட்சியால் டெல்டாவில் சோகம்”; ஸ்டாலின் காட்டம்

சென்னை, ஆக.04-

‘ஜூன் 12 வந்து சேர்ந்திருக்க வேண்டிய காவிரி நீர் ஆகஸ்ட் பிறந்தும் வரவில்லை. ஆடி பதினெட்டில் பொங்கி வரும் புதுப்புனலை வரவேற்ற காவிரிக்கரையின் மைந்தர்கள் விவசாய விரோதி விஜய் ஆட்சியின் சோம்பேறித்தனத்தால் சோகத்தில் மூழ்கியுள்ளனர்’ என திமுக தலைவர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், “காவிரி விவசாயிகளுக்காக எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் தஞ்சையில் திரண்டது திமுக. உழவர் பெருமக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் போராட்டம் பெருகும். காவிரி பெருக்கெடுக்க வேண்டிய ஆடிப்பெருக்கு நாளில் டெல்டா விவசாயிகள் ஆதங்கம் பெருக்கெடுக்கப் போராடி வருகின்றனர்.

விவசாயப் பெருங்குடி மக்களின் உணர்வுகளை உரக்கச் சொல்லும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற தோழமைக் கட்சித் தலைவர்கள் ஜவாஹிருல்லா, தமிமுன் அன்சாரி, நெல்லை முபாரக் ஆகியோருக்கும், அக்கட்சிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட தோழர்களுக்கும், பல்வேறு விவசாயச் சங்கப் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைவருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



ஜூன் 12 வந்து சேர்ந்திருக்க வேண்டிய காவிரி நீர் ஆகஸ்ட் பிறந்தும் வரவில்லை. ஆடி பதினெட்டில் பொங்கி வரும் புதுப்புனலை வரவேற்ற காவிரிக்கரையின் மைந்தர்கள், விவசாய விரோதி விஜய் ஆட்சியின் சோம்பேறித்தனத்தால் சோகத்தில் மூழ்கியுள்ளனர்.

தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் திறந்து விட மறுக்கும் கர்நாடக அரசைக் கண்டித்து ஒரு வார்த்தை கூட பேசாத முதல்வரை தமிழ்நாடு இப்போதுதான் பார்க்கிறது. அண்டை மாநிலத்தில் திரைப்படம் ஓடுவதற்காக நம் விவசாயிகளின் வாழ்க்கையையா அடகு வைப்பீர்கள்?

முழுக் கடன் தள்ளுபடி என வாழைப்பழம் போல வாக்குறுதி தந்து வெற்றி பெற்றுவிட்டு, விவசாயிகளை ஏமாற்றிய மோசடி ஆட்சியாக இந்தத் த.வெ.க. ஆட்சி நடந்துகொண்டிருக்கிறது.

மேகேதாட்டு அணை கட்டியே தீருவோம் என அடம் பிடிக்கும் கர்நாடகத்துடன் பேச்சுவார்த்தைக்குச் செல்லத் துடியாய்த் துடிக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் நேற்று கர்நாடகத்தில் நடந்த அனைத்துக் கட்சிக் கூட்டம் பற்றிய செய்திகளைப் பார்த்தாரா? இங்கு அதேபோல் அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்ட முதல்வருக்கு நேரமில்லையா?

விவசாயிகளைச் சந்திக்காமல் புறக்கணித்துவிட்டு, வேளாண் பட்ஜெட்டைத் திருப்பதிக்குத் தூக்கிக் கொண்டு சென்றால் உங்கள் பாவங்கள் போய்விடுமா?

நாக்பூரில் நம் விவசாயிகள் கைது செய்யப்பட்டதற்குக் கூட கண்டனம் தெரிவிக்காமல், கள்ள மவுனம் காக்கிறார் திரையில் தன்னூத்து விவசாயியாக வேடம் தரித்தவர்.

விவசாயிகளை இனியும் வஞ்சிக்காமல் த.வெ.க. அரசு வாக்குறுதியளித்தபடி முழுக் கடன் தள்ளுபடி செய்ய வேண்டும். குறுவை சிறப்பு நிவாரணத் தொகுப்பு வழங்கி, டெல்டா மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவித்திட வேண்டும்.

காவிரியில் தமிழ்நாட்டின் உரிமையைக் காற்றில் பறக்க விடாமல் தீவிரமாகச் செயல்பட வேண்டும். அதுவரை கழகத்தின் போராட்டம் தொடரும்’ என்று ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

## கூடுதல் அரசு வாகனங்களை உடனடியாக ஒப்படைக்க உத்தரவு!

சென்னை, ஆக.04-

அரசு அதிகாரிகள் தங்களிடம் கூடுதலாக இருக்கும் அரசு வாகனங்களை உடனடியாக ஒப்படைக்க வேண்டும் என தமிழ்நாடு அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. சில ஐஏஎஸ் அதிகாரிகள் அரசு வாகனங்களைச் சொந்தத் தேவைகளுக்குப் பயன்படுத்துவதாகவும், சிலரிடம் நான்கு கார்களுக்கு மேல் இருப்பதாகவும் கடுமையான குற்றச்சாட்டுகள் எழுந்தன. இந்த விவகாரத்தைக் கருத்தில் கொண்டு அரசு தரப்பிலிருந்து இந்த முக்கிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அரசின் இந்த அதிரடி உத்தரவைத் தொடர்ந்து, பல அதிகாரிகளும் தங்களிடம் இருந்த கூடுதல் கார்களைத் திரும்ப ஒப்படைத்து வருகின்றனர். அரசாங்கத்தின் சொத்துகள் மற்றும் வாகனங்கள் முறையான பயன்பாட்டில் இருப்பதை உறுதி செய்ய இந்த நடவடிக்கை அவசியமாகியுள்ளது. விதிமுறைகளை மீறி வாகனங்களை வைத்திருக்கும் அதிகாரிகள் மீதும் உரிய சோதனைகள் நடத்தப்பட்டு வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதிகாரிகளின் இந்த வாகனப் பயன்பாடு குறித்த புகார்கள் மீது அரசு தொடர்ந்து தீவிரக் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகிறது. அரசின் இந்த கண்டிப்பான நடவடிக்கையானது அரசு நிர்வாகத்தில் பெரும் பரபரப்பையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது. வரும் நாட்களில் இது போன்ற முறைகேடுகளைத் தவிர்க்கத் துறை ரீதியான கூடுதல் கட்டுப்பாடுகளும் விதிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## வளர்ச்சி அடைந்த இந்தியாவுக்கு போதைப்பொருள் இல்லாத இளைஞர்கள் அவசியம்

### பிரதமர் மோடி வலியுறுத்தல்

புதுடெல்லி, ஆக.04-

இந்தியாவில், இளைஞர்களிடையே போதைப்பொருள் பழக்கத்தை முற்றிலும் ஒழிக்கும் நோக்கில், ‘வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான போதைப்பொருள் இல்லா இளைஞர் உறுதிமொழி இயக்கம்' விழிப்புணர்வு பிரச்சாரத்தை பிரதமர் நரேந்திர மோடி காணொலிக் காட்சி வாயிலாக இன்று தொடக்கி வைத்தார். இதில், ஏராளமானோர் காணொலி முறையில் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் பிரதமர் பேசுகையில், “போதைப்பொருள் தற்காலிக மகிழ்ச்சியைத் தந்தாலும், அது ஒட்டுமொத்த வாழ்க்கையையும் பாதாளத்தில் தள்ளிவிடும். போதைப் பழக்கத்தில் இருந்து மீண்டு வருபவர்கள்தான் உண்மையான போராளிகள். அவர்களை சமூகம் புறக்கணிக்காமல், கௌரவித்து மறுவாய்ப்பு அளிக்க வேண்டும். போதைப்பொருள் பழக்கத்தில் இருப்பவர்கள், யோகா, தியானம் மற்றும் சமூகத்தினரின் ஆதரவு மூலம் விடுபட முடியும்.

வளர்ச்சி அடைந்த இந்தியா என்ற இலக்கை அடைவதற்கு இளைஞர்கள் உடல் அளவிலும் மனதளவிலும் ஆரோக்கியத்துடனும் முழு தன்னம்பிக்கையுடனும் போதைப்பொருள் பயன்பாட்டில் இருந்து விலகி இருக்க வேண்டும். இதுதான் இந்த பிரசாசரத்தின் நோக்கம்.

ஒருவர் போதைப்பொருள் பழகத்திற்கு அடிமையானால், அவர்களின் உடல்நலம் மட்டும் பாதிக்கப்படுவதில்லை. அவர்களின் தாயாரின் முகத்தில் இருந்த புன்னகை மறைந்து விடுகிறது. தந்தையின் எதிர்கால கனவு சிதைந்து விடுகிறது. தங்கையின் நம்பிக்கை குறைகிறது. இளைஞர்களுக்கு சமூகத்தில் இருந்த நன்மதிப்பும் குறைந்து விடுகிறது.

தங்கள் கண்முன்னே பிள்ளைகளின் வாழ்க்கை படிப்படியாக பாழாவதைக் கண்டு தினம் தினம் பெற்றோர் வேதனையுடன் வாழ்கிறார்கள். பிள்ளைகளின் போதைப் பழக்கத்தை பெற்றோர் அவமானமாகக் கருதி மூடி மறைக்காமல், அவர்களுடன் வெளிப்படையாகப் பேசி மருத்துவ உதவியை நாட வேண்டும்.

இந்த விழிப்புணர்வு பிரச்சாரம் நாடு முழுவதும் தொடர்ந்து 100 வாரங்களுக்கு மக்கள் இயக்கமாக நடைபெறும். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் விளையாட்டுப் போட்டிகள், நடைப்பயணங்கள், தியான அமர்வுகள், வீதி நாடகங்கள் மற்றும் கலைப் போட்டிகள் போன்ற பல்வேறு விழிப்புணர்வு செயல்பாடுகள் நடத்தப்படும்.

2047க்குள் ‘வளர்ச்சியடைந்த பாரதத்தை’ உருவாக்க இளைஞர்கள் உடல் மற்றும் மன ஆரோக்கியத்துடன் இருப்பது அவசியம்.

போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு எதிராக அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. முந்தைய காலத்தை விட தற்போது கைது நடவடிக்கைகளும், பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான போதைப்பொருள் பறிமுதல்களும் பல மடங்கு அதிகரித்துள்ளன" என்று பிரதமர் மோடி தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா, பல்வேறு கல்வி நிறுவனங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் 125க்கும் மேற்பட்ட ஆன்மிக அமைப்புகளைச் சேர்ந்த ஏராளமான இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

## அறநிலையத் துறை ஊழல் குறித்து வெள்ளை அறிக்கை வெளியிடப்படும்: அமைச்சர் ரமேஷ் தகவல்

திருச்சி, ஆக.04-

இந்து சமய அறநிலையத் துறையில் கடந்த ஆட்சியில் நடைபெற்ற ஊழல் குறித்து வெள்ளை அறிக்கை வெளியிடுவது தொடர்பாக ஆலோசனை நடத்தி வருகிறோம் என அமைச்சர் ரமேஷ் தெரிவித்துள்ளார்.

சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் 221வது நினைவு நாளை முன்னிட்டு தமிழக அரசு சார்பில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ், சட்டப்பேரவை துணைத் தலைவர் ரவிசங்கர் ஆகியோர் திருச்சி அரசு போக்குவரத்து கழக வளாகத்தில் உள்ள தீரன் சின்னமலை உருவ சிறைக்கு இன்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.




முன்னதாக அமைச்சர் ரமேஷ் செய்தியாளர்களிடம் கூறியது: தமிழக முதல்வர் விஜய் அனைத்து தலைவர்களும் பாராட்டத்தக்க வகையில் சிறந்த ஆட்சியை நடத்தி வருகிறார். வாக்களிக்காதவர்கள் கூட சந்தோஷமாக வாழக்கூடிய அளவிலே ஆட்சி உள்ளது.

முதல்வர் தனித்து விடப்பட்டிருப்பதாக ஸ்டாலின் கூறியுள்ளார். உண்மையிலேயே தனித்து விடப்பட்டது யார் என ஸ்டாலினிடம் கேளுங்கள். சட்டமன்றத்திலிருந்து பேசிக்கொண்டிருந்த ஸ்டாலின் இன்று சட்டமன்ற நிகழ்வுகளை வீட்டில் இருந்து பார்க்கக்கூடிய நிலைமைக்கு தனித்து விடப்பட்டிருக்கிறார் என்பதுதான் உண்மை.

எல்லா விஷயத்தையும் பேசி பேசி தான் செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லை. செயலில் காட்டினால் போதும். எங்களுடைய முதல்வர் செயலில் காட்டக்கூடியவர். ஸ்ரீரங்கம் கோயிலுக்கு வந்த ஆந்திர பெண்ணிடம் ரூ.2,000 லஞ்சம் பெற்றதாக வந்த புகார் தொடர்பாக விசாரணை நடைபெற்று வருகிறது. அனைத்து கோயில்களிலும் ஒரு சிலரால் இதுபோன்று நடக்கிறது. இது தொடர்பாக விசாரணை பெற்று வருகிறது. அந்த விசாரணையின், அடிப்படையில் தவறுகள் நிரூபிக்கபட்டால் நிச்சயமாக யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும்.

உள்ளாட்சித் தேர்தலுக்காக வெறியோட காத்திருப்பதாக சீமான் சொல்லியிருக்கிறார். பெரம்பூர், திருச்சி கிழக்கு தொகுதியிலும் சாதி பார்த்துதான் வேட்பாளரை நிறுத்தினார். வெறுப்பு அரசியல் பேசி, ஒரு தலைவருக்கு எதிராக பேசுவது; இதையெல்லாம் விட்டுட்டு உண்மையிலேயே வெற்றி பெறுவதற்கான நோக்கத்தோடு பேசினால் நிச்சயமாக உள்ளாட்சி தேர்தலில் ஏதாவது ஓரிரு இடத்தில அவர் வெல்வதற்கான வாய்ப்புகள் இருக்கிறது. அதை முயற்சி செய்ய வேண்டும் என அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

காவிரி கொள்ளிடத்தில் தடுப்பணை கட்டுவது தொடர்பான கோரிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் ஆய்வு நடத்தி வருகிறார். நிதிநிலையை பொறுத்து என்னென்ன திட்டங்களை எப்படி கொண்டு வர வேண்டும் என முடிவெடுப்போம். அமைச்சர் செந்தில் பாலாஜி ஓடி ஒளியவில்லை என்றால் இத்தனை நாள் எங்கிருந்தார்? நீதிமன்ற நடைமுறைகளை தைரியமாக எதிர்கொண்டு நின்று இருக்க வேண்டியதுதானே? அதெல்லாம் சும்மா வெளியில் வந்து வீரத்துக்கு கூறுவதுதான்.

ஊடகங்களில் பேசுபவர்கள் ஏதாவது பேசுவார்கள். நிச்சயமாக இந்த ஆட்சியை பொறுத்த வரை, எங்கள் தலைவர் சொன்னது போல நாங்களும் ஊழல் செய்ய மாட்டோம். ஊழல் செய்தவர்களை விட மாட்டோம். செந்தில் பாலாஜி நிச்சயமாக தண்டிக்கப்படுவார். தவறு செய்யும் கீழ்மட்ட அதிகாரிகள் முதல் உயர்மட்ட அதிகாரிகள் வரை அனைவர் மீதும் விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்து சமய அறநிலையத் துறையில் கடந்த ஆட்சியில் நடைபெற்ற ஊழல் தொடர்பாக வெள்ளை அறிக்கை வெளியிடுவது தொடர்பாக ஆலோசனை நடத்தி வருகிறோம். கடந்த ஆட்சியில் என்னென்ன கோயில் சொத்துக்கள் அபகரிக்கப்பட்டிருக்கின்றன, என்னென்ன தவறுகள் நடந்திருக்கிறது என அனைத்தையும் ஆய்வு செய்து வருகிறோம்.

அதன் அடிப்படையில் யாரெல்லாம் குற்றங்களில் ஈடுபட்டிருகிறார்கள் என கவனித்து வருகிறோம். இந்து சமய அறநிலையத் துறையை பொறுத்த வரை நிச்சயமாக ஊழலை ஒழிப்போம்.


இதுவரைக்கும் இருந்த ஊழல்களை எல்லாம் நாங்கள் ஒழித்துட்டு, கோயில் சொத்துக்களை முறைகேடாக யார் யாரெல்லாம் பயன்படுத்தி இருக்கிறார்கள்; முறைகேடாக என்ன நடந்திருக்கிறது என அனைத்தையும் விசாரணை செய்து வருகிறோம். ஒவ்வொன்றாக விசாரித்து இருக்கறோம். அதற்கான தனித்தனி குழுக்கள் விரைவில் அமைக்கப்படும்.

ஒவ்வொரு கோயிலின் சொத்துக்களையும் பாதுகாக்கவும், அதில் நடந்த முறைகேடுகளை கண்டுபிடிக்கவும் குழுக்கள் அமைக்க இருக்கிறோம். தொடர் நடவடிக்கையால் இறுதியில் வெளியாகும் பலனை நீங்கள் பார்க்கப் போகிறீர்கள். கோயில் சொத்துக்கள் அனைத்தும் பாதுகாக்கப்படும்” என்று அவர் கூறினார்.

## உடலுறுப்பு தானம்; இந்தியாவில் தொடர்ந்து முதலிடத்தில் இருக்கும் தமிழ்நாடு!

சென்னை, ஆக.04-

மருத்துவத்துறையில் பல்வேறு சாதனைகளைப் படைத்து வரும் தமிழ்நாடு, மாபெரும் மனிதநேயச் செயலிலும் தொடர்ந்து தேசிய அளவில் முதலிடத்தை வைத்துள்ளது. மரணத்திற்குப் பிறகும் மற்றவர்களுக்கு வாழ்வளிக்கும் உன்னத நோக்கில் உடலுறுப்பு தானம் செய்வதில் மற்ற மாநிலங்களை விடத் தமிழகம் முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது. அரசின் தொடர் விழிப்புணர்வு நடவடிக்கைகளும் பொதுமக்களின் சிறப்பான ஒத்துழைப்பும் இந்தச் சாதனைக்கு முக்கியக் காரணமாக அமைந்துள்ளது.




உடலுறுப்பு தானம் செய்பவர்களின் தியாகத்தைப் போற்றும் வகையில் தமிழக அரசு பல்வேறு முன்னெடுப்புகளைச் செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, மறைந்த உடலுறுப்பு கொடையாளர்களின் திருவுடலுக்கு அரசு மரியாதை செலுத்தப்படும் என்ற தனித்துவமான அறிவிப்பு பொதுமக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. இதன் காரணமாகத் தாமாக முன்வந்து உடலுறுப்பு தானம் செய்யப் பதிவு செய்வோரின் எண்ணிக்கை கடந்த சில ஆண்டுகளாகக் கணிசமாக அதிகரித்து வருகிறது.

உடலுறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளை வெற்றிகரமாக மேற்கொள்ளத் தேவையான கட்டமைப்பு வசதிகள் தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் பலப்படுத்தப்பட்டுள்ளன. உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வு கிராமப்புறங்கள் வரை சென்றடைந்துள்ளதால் பல உயிர்களைக் காப்பாற்ற முடிகிறது. மனிதநேயத்தின் அடையாளமாக விளங்கும் இந்தச் சாதனையைத் தக்கவைக்கத் தமிழக அரசு தொடர்ந்து பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.




# மக்காச்சோள விவசாயிகளுக்கு கோத்ரெஜ் அக்ரோவெட் புதிய பலம்: அஷிடாகா டக்காய் மூலம் களை, படைப்புழு தாக்குதலுக்கு தீர்வு

மதுரை, ஆக.4-

தமிழ்நாட்டில் மக்காச்சோள விவசாயிகளுக்கு ஆதரவை மேலும் வலுப்படுத்தும் வகையில், கோத்ரெஜ் அக்ரோவெட் நிறுவனம் தனது அஷிடாகா மற்றும் டக்காய் பயிர் பாதுகாப்புத் தீர்வுகளை விரிவுபடுத்தியுள்ளது.கடந்த ஆண்டு அறிமுகமான இந்த இரு தயாரிப்புகளும், மக்காச்சோளத்தில் மகசூலை பாதிக்கும் களை மற்றும் படைப்புழு (Fall Armyworm) தாக்குதலை திறம்பட கட்டுப்படுத்த உதவுவதாக நிறுவனம் தெரிவித்துள்ளது.தமிழ்நாட்டில் சுமார் 13.3 லட்சம் ஏக்கரில் மக்காச்சோளம் சாகுபடி செய்யப்பட்டு 33 லட்சம் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் மதுரை மண்டலத்தில் மட்டும் 4 லட்சம் ஏக்கருக்கும் அதிகமான பரப்பளவில் மக்காச்சோளம் பயிரிடப்படுகிறது. இதுகுறித்து கோத்ரெஜ் அக்ரோவெட் நிறுவனத்தின் Crop Care Business தலைமை செயல் அதிகாரி என்.கே. ராஜவேலு கூறுகையில், பயிரின் ஆரம்ப நிலையில் களைகளையும் படைப்புழுவையும் சரியான நேரத்தில் கட்டுப்படுத்துவது மகசூலை பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிப்பதாக தெரிவித்தார்.மக்காச்சோளத்தில் களை மேலாண்மைக்காக அஷிடாகா தேர்ந்தெடுக்கப்பட்ட களைக்கொல்லியாக செயல்படுகிறது. டக்காய் புழுக்கொல்லி, படைப்புழுவின் தாக்குதலை கட்டுப்படுத்தி நீடித்த பாதுகாப்பை வழங்குகிறது.இந்த இரண்டு தயாரிப்புகளும் இணைந்து, மக்காச்சோள விவசாயிகள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்களுக்கு அறிவியல் அடிப்படையிலான தீர்வுகளை வழங்கி, சீரான மற்றும் அதிக மகசூலைப் பெற உதவும் என்று நிறுவனம் தெரிவித்துள்ளது.

# மாடப்பள்ளி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் முன்பாக விவசாய கடன் தள்ளுபடி செய்ய கோரி தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்!

திருப்பத்தூர், ஆக.4-

தமிழக முதல்வர் ஜோசப் விஜய் அவர்கள் தன்னுடைய தேர்தல் வாக்குறுதியில் 5 ஏக்கருக்கு உட்பட்ட அனைத்து விவசாயிகளுக்கு முழு கடன் தள்ளுபடியும், ஐந்து ஏக்கருக்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு 50 சதவீத தள்ளுபடியும் செய்யப்படும் என்று கூறியிருந்தார். இந்த நிலையில் ஆட்சிக்கு வந்த பிறகு விவசாயிகளிடையே பிரிவினையை ஏற்படுத்தும் வகையில் முரண்பட்ட வகையில் கடன் தள்ளுபடி அறிவிப்பு செய்து இருந்தார் இதனை கண்டித்து திருப்பத்தூர் மாவட்டம் மாடப்பள்ளி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின்



முன்பாக தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தின் சார்பாக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு எஸ்பி மாணிக்கவாசகம் மாவட்ட பொறுப்பாளர் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் ராதாகிருஷ்ணன் அனைவரையும் வரவேற்றார், மாவட்ட தலைவர் லட்சுமணன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ரவிந்திரன் சுப்பிரமணி, RG மகான், அகரம் கார்த்திகேயன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் வடிவேல் சுப்பிரமணியம் பேசுகையில் பாரபட்சம் இல்லாமல் கடன் தள்ளுபடி செய்ய வேண்டும் கூட்டுறவு சங்கங்களில் கடனை கட்ட நிர்ப்பந்தப் படுத்துகிறார்கள் விவசாயிகள் மிரட்டப்படுகிறார்கள் இதனை உடனடியாக தமிழக முதல்வர் தீர்வு காண வேண்டும், இந்த கடன் உத்தரவை முழு கடன் தள்ளுபடி செய்யவில்லை என்றால் கோட்டையை நோக்கி லட்சக்கணக்கான விவசாயிகளை அனைத்து திரட்டி முற்றுகை போராட்டம் நடத்துவோம் என்றும் தெரிவித்தார். தமிழக அரசை கண்டித்து விவசாயிகள் முழக்கங்களை எழுப்பினர். கடன் தொகையை கட்ட நிர்ப்பந்திக்க கூடாது என ஒவ்வொரு விவசாயியும் தனித்தனியாக கூட்டுறவு சங்க செயலாளர்களிடம் கோரிக்கை மனுக்களை வழங்கினர். சுமார் 300க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.





# அழிஞ்சிவாக்கம் ஸ்ரீ சப்த கன்னிகள் ஆலயத்தில் ஆடிமாத திருவிழா

மாதவரம், ஆக.4-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் அழிஞ்சிவாக்கம் ஊராட்சி புது தெருவில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் அருள்மிகு ஸ்ரீ சப்த கன்னிகள் ஆலயத்தில் ஆடிமாத திருவிழா ஆலய நிர்வாகிகள் மற்றும் கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் கணபதி ஹோமத்துடன் புனிதநீர் கலச வழிபாடு மற்றும் ஸ்ரீ மாரியம்மன் ஆலயம் அருகே உள்ள குளக்கரையிலிருந்து உடுக்கை சிலம்பு வர்ணித்தலுடன் கன்னிமார்கள் பால்குடம் ஊர்வலமாக கொண்டுவந்து அம்மனு பாலபிஷேகம் செய்து தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் அம்மனுக்கு கலச புனிதநீர் அபிஷேகம் செய்து வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மஹா தூபதீப ஆராதனை காண்பித்தனர். இதணைத்தொடர்ந்து உற்சவர் அம்மன் சிறப்பு அலங்காரத்துடன் ஊஞ்சல் சேவை நடைபெற்றது. இத்திருவிழாவிற்கு சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் கலந்துகொண்டு நெய்தீபம் ஏற்றி, பொங்கல் வைத்து அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர். மேலும் இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர்.





■ நீலகிரி மாவட்டம் வெலிங்டன் கண்டோண்மென்ட் பகுதிக்கு உட்பட்ட பிளாக்பிரிட்ஜ் பகுதியில் அமைந்துள்ள கன்னிமார் திருக்கோவிலில் ஆடி 18 ஆடிப்பெருக்கு தினத்தினை முன்னிட்டு சிறப்பு பூஜை நடைபெற்றது.இதில் பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனின் தரிசனம் பெற்றனர். பின்பு பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

# ஸ்ரீதேவி கருமாரியம்மன் ஆலயத்தில் ஆடிமாத திருவிழா

மாதவரம், ஆக.4-

மாதவரம் தொகுதி வில்லிவாக்கம் ஒன்றியம் பம்மதுகுளம் ஊராட்சி ஈஸ்வரன் நகர் மற்றும் கணபதி நகரில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் அருள்மிகு ஸ்ரீ செல்வ வெற்றி விநாயகர், ஸ்ரீதேவி கருமாரியம்மன், ஸ்ரீஆதி வாராஹி அம்மன் ஆலயத்தில் 9ம் ஆண்டு ஆடிமாத திருவிழா மற்றும் ஆஷாட நவராத்திரி விழா ஆலய நிர்வாகிகள் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, செயலாளர் செல்வபிரகாஷ், பொருலாளர் திருமாறன், துணைத் தலைவர்கள் சுரேஷ், அனந்தகிருஷ்ணன், துணை செயலாளர்கள் கோபி, சேகர், முத்துராஜ், ராஜேஷ், கௌரவத்தலைவர்கள் கோபால், வேங்கையன், சட்ட ஆலோசகர்கள் தேவராஜ், அருண், கௌரவ ஆலோசகர்கள் பன்னீர்செல்வம், சரவணன் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் சுப்பிரமணியம், பிரபாகரன், லோகநாதன், சுந்தர், ராமநாதன், பாலசுப்பிரமணியன், கார்த்திக், சக்திவேல், சதீஷ் உள்ளிட்ட கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது.





நிகழ்ச்சியில் கணபதி பூஜையுடன் ஸ்ரீ செல்வ வெற்றி விநாயகருக்கு 108 சங்காபிஷேகம், பந்தகால் நடுதல், முனீஸ்வரர் ஆலயத்திலிருந்து மேளதாளத்துடன் பெண்கள் தங்களது சிறசியில் பால்குடம் எடுத்துவந்து அம்மனுக்கு பால் அபிஷேகம் செய்து மஹா தீபாராதனை காண்பித்தல் மற்றும் தாய்வீட்டு சீர்எடுத்தல், காப்புகட்டுதல், அம்மன் உற்சவர் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மேளதாள வானவேடிக்கைவுடன் திருவீதி நடைபெற்றது. இதனைத்தொடர்ந்து ஸ்ரீதேவி கருமாரியம்மனுக்கு கூழ்வார்த்தல் அதேபோல் கும்பம் படையல்பூஜை உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. இத்திருவிழாவிற்கு ஆலய அனைத்துநிலை பொறுப்பாளர்கள், சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு பொங்கல் வைத்து அர்ச்சனை செய்து சுவாமி தரிசனம் செய்தனர்.மேலும் இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் மற்றும் உபயதாரர்கள் சார்பில் அறுசுவை அன்னதானம் வழங்கினர்.



■ கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் கீழசரக்கல்விளை பகுதியில் அகூஷிதா கன்சல்டிங் அலுவலக திறப்பு விழா நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி மு க செயலாளர் தரெ.மகேஷ் கலந்து கொண்டு திறந்து வைத்தார்.உடன் நாகர்கோவில் மாநகர மாநகர தி.மு.க வட்ட செயலாளர் .அன்சாரி, மாநகர கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் .ஹாஜிபாபு வட்ட பிரதிநிதிகள் இப்ராஹிம், சாகுல், .ஹாஜி அலி, ராஜதுரை ஆகியோர் இருந்தனர்



# தவெக வழக்கறிஞர் அமைப்பாளர் கைது!

தூத்துக்குடி, ஆக.4-

தூத்துக்குடியில் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பிலான பட்டாசுகள் மற்றும் சிலிகான் சீலண்ட் பசை கையாடல் புகாரில் தவெக நிர்வாகி கைது. சோழா லாஜிஸ்டிக்ஸ் நிறுவன மனிதவள மேலாளர் ஜான் அளித்த புகாரின் பேரில் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்திய போலீசார், நிறுவனத்தின் முன்னாள் ஊழியர்களான ஜெய்கிருஷ்ணா, இம்மானுவேல், சக்தி விஜய் உள்ளிட்ட 5 பேரை கைது செய்துள்ளனர்.

# ஆடிபெருக்கு விழா: கிருஷ்ணகிரி அணையில் குவிந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள்தென்பெண்ணையில் 985 கன அடி நீர் திறப்பு

கிருஷ்ணகிரி, ஆக.4-

கிருஷ்ணகிரி அணையில் நடந்த ஆடிபெருக்கு விழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் குவிந்து, தென்பெண்ணை ஆற்றில் புனித நீராடினர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஆடிபெருக்கு விழா (ஆடி 18) இன்று கிருஷ்ணகிரி அணை, மஞ்சமேடு, தீர்த்தம், அனுமன் தீர்த்தம் ஆகிய இடங்களில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அதன்படி, கிருஷ்ணகிரி அணை செல்லியம்மன் கோயில், அவதானப்பட்டி மாரியம்மன் கோயில், பச்சிகானப்பள்ளி மாரியம்மன் கோயில் ஆகிய இடங்களில் சிறப்பு பூஜைகளும், அணையில் சுவாமி வீதி உலாவும் நடைபெற்றது. ஆடிப்பெ ருக்கையொட்டி, கிருஷ்ணகிரி அணைக்கு கிருஷ்ணகிரி, தருமபுரி, திருப்பத்தூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் இருந்தும், ஆந்திரா மற்றும் கர்நாடகா மாநிலங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் வந்திருந்தனர்.இவர்களில் பெரும்பாலானோர் அணை பகுதியில் உள்ள மார்கண்டேஸ்வரர்





ஆலயத்தின் அருகில் உள்ள நந்தியில் இருந்து வரும் தண்ணீரிலும், தென்பெண்ணை ஆற்றிலும் புனிதநீராடி சுவாமி வழிபாடு செய்தனர். தொடர்ந்து பெண்கள், இளைஞர்கள் தங்கள் கைகளை தலைக்கு மேல் உயர்த்தி பிடித்து கொள்ள, கோயில் பூசாரி சாட்டையால், அவர்கள் கை மீது அடிக்கும் நூதன வழிபாடு நிகழ்வும் நடந்தது.மாவட்ட எஸ்பி அனிதா உத்தரவின் பேரில், டிஎஸ்பி ராமச்சந்திரன் தலைமையில் 400க்கும் மேற்பட்ட போலீஸார், ஊர்காவல் படையினர் உள்ளிட்டோர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். அணைக்கு சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டன. மேலும், அவதானப்பட்டி சிறுவர் பூங்கா, படகு இல்லத்தில் சுற்றுலாப் பயணிகள் கூட்டம் அதிக அளவில் காணப்பட்டது. தென்பெண்ணை ஆற்றில் 985 கன அடி தண்ணீர் திறப்பு:ஆடிப்பெருக்கு விழாவினையொட்டி தென்பெண்ணை ஆற்றில் தண்ணீர் திறக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். இதனை ஏற்று கடந்த சில நாட்களாக அணையில் இருந்து விநாடிக்கு 985 கனஅடி தண்ணீர் ஆற்றில் திறந்துவிடப்பட்டது. இதனால் பக்தர்கள் பெண்ணேஸ்வர மடம், நெடுங்கல், அகரம், மஞ்சமேடு உள்ளிட்ட பகுதிகளில் புனித நீராடினர்.மே லும், கிருஷ்ணகிரி அணைக்கு நீர்வரத்து நேற்று விநாடிக்கு 546 கனஅடியாக இருந்த நிலையில் இன்று காலை விநாடிக்கு 556 கனஅடியாக அதிகரித்தது. இதன் காரணமாக 52 அடி உயரம் கொண்ட அணையின் நீர்மட்டம் 46.85 அடியை எட்டியுள்ளது. மேலும், அணையில் இருந்து பாசனத்திற்கும், ஆற்றிலும் விநாடிக்கு 985 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.



## மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்: 292 மனுக்கள் பெறப்பட்டதுமாற்றுத்திறனாளிகளிடம் கோரிக்கை மனுக்களை பெற்று நலத்திட்ட உதவிகள் வழங்கிய மாவட்ட ஆட்சியர் ப.ஆகாஷ்

சிவகங்கை, ஆக.4-

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நேற்று (03.08.2026) நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர் ப.ஆகாஷ், இ.ஆ.ப., பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திற னாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களை நேரில் பெற்றுக் கொண்டு, அவர்களின் கோரிக்கைகள் குறித்து கேட்டறிந்தார்.



கூட்டத்தில் இலவச வீட்டுமனைப் பட்டா, சமூக பாதுகாப்புத் திட்ட உதவித்தொகை, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை உதவித்தொகை, மாற்றுத்திற னாளிகளுக்கான உபகரணங்கள், புதிய மின்னணு குடும்ப அட்டை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து மொத்தம் 292 மனுக்கள் பெறப்பட்டன. தகுதியான மனுக்களுக்கு முன்னுரிமை அளித்து விரைந்து நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தினார். இதனைத் தொடர்ந்து, படைவீரர் கொடிநாள்ஃ2023 நிதியாக ரூ.10,35,700 வசூலித்ததற்காக பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் பி.கணேசன் அவர்களுக்கு வெள்ளிப்பதக்கம் மற்றும் தலைமைச் செயலரின் பாராட்டுச் சான்றிதழை மாவட்ட ஆட்சியர் வழங்கி கவுரவித்தார்மேலும், மாற்றுத்திறன் படைத்த முன்னாள் படைவீரர்களின் சார்ந்தோருக்கான திட்டத்தின் கீழ், மின் மோட்டார் பொருத்தப்பட்ட இலவச சக்கர நாற்காலியையும் மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மரு. எஸ். செல்வசுரபி, முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் மேஜர் மரு. கலைஅரசன்.ப (ஓய்வு) மற்றும் அரசின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



## மக்கள் குறைதீர்க்கும் கூட்டத்தில் ரூ.3.75 லட்சம் நலத்திட்ட உதவிகள் : ஆட்சியர் நிஷாந்த் கிருஷ்ணா வழங்கினார்

மதுரை, ஆக.4-

மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர் நிஷாந்த் கிருஷ்ணா தலைமையில் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டன. இக்கூட்டத்தில் ரூ.3.75 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு ஆட்சியர் வழங்கினார். வீட்டு மனைப்பட்டா, பட்டா மாறுதல், குடும்ப அட்டை, வேலைவாய்ப்பு, விபத்து நிவாரணம், மாற்றுத்திறனாளிகள் நலத்திட்டங்கள், விதவை உதவித்தொகை, திருமண உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக பொதுமக்களிடம் இருந்து மனுக்கள் பெறப்பட்டன.



குறிப்பாக மாற்றுத் திறனாளிகள் மற்றும் மூத்த குடிமக்களுக்காக அமைக்கப்பட்டிருந்த சிறப்பு அமர்விடத்திற்கே நேரில் சென்று ஆட்சியர் மனுக்களை பெற்றுக்கொண்டார். பெறப்பட்ட அனைத்து மனுக்களுக்கும் விரைந்து நடவடிக்கை எடுக்கவும், முதலமைச்சர் தனிப்பிரிவு மனுக்கள் மீது தனிக்கவனம் செலுத்தவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டார்.முன்னாள் படைவீரர் நல இயக்ககம் சார்பில் ரூ.25 ஆயிரம் மதிப்பிலான திருமண உதவித் தொகைக்கான ஆணையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.3 லட்சத்து 50 ஆயிரத்து 500 மதிப்பில் 4 பயனாளிகளுக்கு செயற்கை உறுப்புகளும் வழங்கப்பட்டன.மேலும், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் 2024ஃ25ஆம் ஆண்டிற்கான சிறந்த விடுதி காப்பாளர் மற்றும் காப்பாளினிகளாக தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பரிசுத்தொகையை மாவட்ட ஆட்சியர் நிஷாந்த் கிருஷ்ணா வழங்கி பாராட்டினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் க.அன்பழகன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) பொன்ராஜ், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சாமிநாதன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கிருஷ்ணகிரி அருகே இரண்டு ராணுவ வீரர்கள் எரித்து கொலை செய்யப்பட்ட வழக்கை சிபிஐ க்கு மாற்றம் செய்ய வழியுறுத்தி பாதிக்கப்பட்ட உறவினர்கள் கண்ணீருடன் மாவட்ட ஆட்சியரை சந்தித்து கோரிக்கை மனுவினைக் கொடுத்தனர்

கிருஷ்ணகிரி, ஆக.4-

கிருஷ்ணகிரி அருகே உள்ள பாலகுறி கிரமத்தை தேர்ந்த இந்திய ராணுவ வீரர் மகேஷ்குமார் மற்றும் இவரது தந்தை முன்னாள் இந்திய இராணுவ வீரரான செல்லப்பா ஆகிய இருவரையும் மகேஷ் குமாரின் மனைவி பானுபிரியா மற்றும் அவளது கள்ள காதலன் பூவரசன ஆகிய இருவரும் கடந்த மே மாதம் மகேஷ் குமார் மற்றும் அவரது தந்தை செல்லப்பா ஆகிய இருவரையும் வீட்டில் கொலை செய்து உடலை தூக்கி சென்று அருகில் உள்ள வனப்பகுதிக்கு எடுத்துயில் எரித்து கொலை செய்யப்பட்ட வழக்கில் பானுபிரியா மற்றும் அவளது கள்ள காதலன் பூவரசன் ஆகிய இருவரையும் போலிசார் கைத செய்து மத்திய சிறையில் அடைத்துள்ளனர்.இந்த நிலையில் கொலை செய்யப்பட்ட மகேஷ்குமாரின் தாயார் காளியம்மாள் மற்றும் உறவினர்கள் கொலை செய்தது மட்டுமின்றி பானுபிரியாவின் உறவினர்கள் எங்களை அடியாள்கள் மூலம் கொலை மிரட்டல் விடுத்து வருவதாகவும், இரட்டை கொலை வழக்கை சி.பி.ஐ, க்கு மாற்றம் செய்திட வழியுறுத்தி மகேஷ் குமாரின் தாயார் காளியம்மாள் மற்றும் சகோதரிகள் மாவட்ட ஆட்சியர் தினேஷ்குமாரை சந்தித்து கண்ணீருடன் புகார் மனுவினைக் கொடுத்தனர்.இதனைத் தொடந்து மகேஷ்குமாரின் உறவினர்கள் கடந்த மே மாதம் எனது அண்ணன் மகேஷ் குமார், மற்றும் எனது தந்தை செல்லப்பா ஆகிய இருவரையும் கொலை செய்து அருகில் உள்ள வனப்பகுதிக்கு கொண்டு சென்று எரித்துள்ளன. இந்த இரட்டை கொலை சம்பவத்தில் தொடர்ப்புடைய மகேஷ் குமாரின் மனைவி பானுபிரியா மற்றும் அவரது கள்ளக்காலன் பூவரசன் ஆகியோரை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்மேலும் இந்த இரட்டை கொலை வழக்கிப் இன்னும் பலர் சம்மந்தப்பட்டு உள்ளனர் இவர்கள் அடிக்கடி எங்களை மிரட்டி வருவதோடு கொலை மிட்டலும் விடுத்து வருகின்றனர், இதனால் எங்களால் வீடடை விட்டு வெளியே வர முடியாத நிலை உள்ளதுஆகையால் இந்த இரட்டை கொலை வழக்கில் இன்னும் பலர் சம்மந்தப்பட்டுள்ளனர், அவர்கள் மீது காவல் துறையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்உள்ளிட்ட சம்மந்தப்பட்டவர்களுக்கு புகார் மனுக்கள் கொடுத்தும் இது வரை எந்த பயனும் இல்லை இதனால் இன்று மாவட்ட ஆட்சியரை சந்தித்து இரட்டை கொலை வழக்கில் மேலும் தொடர்புடைய குற்றவாளிகளை பிடிக்க இந்த வழக்கை சி.பி.ஐக்கு மாற்றம் செய்திட வேண்டும் என்று வழியுறுத்தினர்.



## பம்மதுகுளம் அருள்மிகு ஸ்ரீ கெங்கையம்மன் ஆலயத்தில் 27ம் ஆண்டு ஆடிமாத தீமிதி திருவிழா

மாதவரம், ஆக.4-

மாதவரம் தொகுதி வில்லிவாக்கம் ஒன்றியம் பம்மதுகுளம் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ கெங்கையம்மன் ஆலயத்தில் 27ம் ஆண்டு தீமிதி திருவிழா ஆலய நிர்வாகிகள் செயலாளர் பத்மநாபன், பொருலாளர் துரைகனகவேல், துணைத்தலைவர் கனகராஜ், துணை செயலாளர் கர்ணால்சூரியா, கமிட்டி தலைவர் கவியரசன் மற்றும் ஆலய பூசாரி வளர்மதி, ஆன்மீக சேவகர்கள் அசோகன், ஏழுமலை, சேகர், ஜெயராமன், திருமலை, கமிட்டி உறுப்பினர்கள் நாகராஜ், நந்தி, விஜயன், திருநாவுக்கரசு, பன்னீர்தாஸ், சுரேஷ் உள்ளிட்ட கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் கணபதி பூஜையுடன் அம்மன் காப்பு, கலசகாப்பு, கரககாப்பு, குமாரமக்கள் காப்பு, பூங்கரகம் எடுத்தல், பால்குடம் எடுத்தல், திருவிளக்கு பூஜை, தாய்வீட்டு சீதனம் எடுத்தல், கூழ்வார்த்தல், அலகுபானை எடுத்தல் போன்றவை நடைபெற்றது.பின்னர் சுமார் 200க்கும் மேற்பட்ட காப்புகட்டிய பக்தர்கள் தீகுண்டத்தில் இரங்கி தங்களின் நேர்த்திகடனை பூர்த்தி செய்தனர். இதணைத்தொடர்ந்து அம்மன் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வானவேடிக்கைவுடன் திருவீதி உலா நடைபெற்றது. இத்திருவிழாவிற்கு ஆலய பொறுப்பாளர்கள், சுற்றுவட்டார பக்தர்கள் உள்ளிட்ட கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். மேலும் இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் மற்றும் உபயதாரர்கள் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர்.









## கன்னியாகுமரி மாவட்டம் மண்டைக்காடு பகவதி அம்மன் கோயிலில் கோலாகலமாக நடைபெற்ற 'நிறை புத்தரிசி பூஜை

கன்னியாகுமரி, ஆக.4-

பெண்களின் சபரிமலை என்று அழைக்கப்படும் பிரசித்தி பெற்ற மண்டைக்காடு பகவதி அம்மன் திருக்கோவிலில், நடப்பாண்டுக்கான 'நிறை புத்தரிசி பூஜை' பக்தி பரவசத்துடன் வெகு விமரிசையாக நடைபெற்றது.இவ்விழாவில் கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் சுற்றியுள்ள பல்வேறு பகுதிகளில் இருந்து திரளான பக்தர்கள் கலந்துகொண்டு அம்மனை தரிசித்தனர். பூஜைக்கு பிறகு பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்பட்ட புனித நெற்கதிர்களை பக்தர்கள் தங்கள் வீடுகளிலும், விவசாய நிலங்களிலும் மற்றும் தொழில் நிறுவனங்களிலும் பாதுகாப்பாக கட்டி வைத்து வழிபாடு நடத்தினர். இந்த நிகழ்வு இப்பகுதி மக்களிடையே ஆன்மீக எழுச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## அய்யங்கொல்லை கிராமத்திற்கு அடிப்படை வசதிகள் கோரி அறப்போர் இயக்கம் மனு - உடனடி நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சியர் உறுதி

திருப்பத்தூர், ஆக.4-

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி தாலுகா, ஆண்டியப்பனூர் ஊராட்சிக்குட்பட்ட அய்யங்கொல்லை கிராமத்தில் வசிக்கும் சுமார் 20 குடும்பங்களுக்கு 50ஆண்டு காலமாக குடிநீர், மின்சாரம், சாலை, போக்குவரத்து, சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் முழுமையாக கிடைக்காத நிலை இருந்து வருகிறது.இந்நிலையில், அறப்போர் இயக்கத்தின் தன்னார்வலர்கள் நேரடி கள ஆய்வு மேற்கொண்டு, அப்பகுதி மக்களின் குறைகளை ஆய்வு செய்தனர். அதன் அடிப்படையில், 03.08.2026 திங்கட்கிழமை நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் முகாமில், திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் மதிப்பிற்குரிய ரவிக்குமார், விரிவான கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. மனுவில், கிராமத்திற்கு நிரந்தர மின்சார வசதி, அனைத்து காலங்களிலும் பயன்படுத்தக்கூடிய



சாலை, நீரோடையை பாதுகாப்பாகக் கடக்க மேம்பாலம் அமைத்தல், கைப்பம்பை மட்டுமே நம்பியுள்ள குடிநீர் வசதிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் மின்மோட்டார் அமைத்தல், பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள கழிப்பறைகளை சீரமைத்தல், யானைகள் சேதப்படுத்திய வீடுகளுக்கு இழப்பீடு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல், அரசின் Door Step Scheme, சுகாதாரத் துறை மற்றும் கிராமப்புற செவிலியர் சேவைகள் தொடர்ந்து கிடைப்பதை உறுதி செய்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப் பட்டன.மேலும், மழைக்காலங்களில் நீரோடை பெருக்கெடுப்பதால் பள்ளி மாணவர்கள் பள்ளிக்குச் செல்ல முடியாததும், நோயாளிகள் மருத்துவமனைக்கு செல்ல இயலாததும், அத்தியாவசிய சேவைகள் முற்றிலும் பாதிக்கப்படுவதும் மாவட்ட நிர்வாகத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.மனுவை பெற்றுக் கொண்ட மாவட்ட ஆட்சியர் ரவிக்குமார் அவர்கள், ஏற்கனவே தனியார் நிறுவனத்தின் சிஷிஸி நிதி மூலம் சோலார் தெருவிளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதை தெரிவித்தார். மேலும், பாலம் அமைத்தல், சாலை வசதி ஏற்படுத்துதல், குடிநீர் நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் மின்மோட்டார் பொருத்துதல், வாகனப் போக்குவரத்துக்கு ஏற்ற சாலை அமைத்தல் உள்ளிட்ட பணிகளை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் மூலம் விரைந்து ஆய்வு செய்து, சாத்தியமான பணிகளை உடனடியாக மேற்கொள்ள உத்தரவிட்டார். பொதுமக்களின் நியாயமான கோரிக்கைகள் முன்னுரிமையுடன் பரிசீலிக்கப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் உறுதியளித்தார்.இந்த மனுவை அறப்போர் இயக்கத்தின் சார்பில் கே.ஜி.எஸ். சுரேஷ், சுரேஷ்குமார், அன்பு, முனிராஜ், திருக்குமரன் மற்றும் சேலம் மண்டல ஒருங்கிணைப்பாளர் ஜாய் ஆகியோர் மாவட்ட ஆட்சியரிடம் வழங்கினர். கிராம மக்களின் அடிப்படை வாழ்வுரிமையை உறுதி செய்ய மாவட்ட நிர்வாகம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறப்போர் இயக்கம் வலியுறுத்தியுள்ளது.



# உடலை மருத்துவக் கல்லூரிக்கு தானமாக வழங்கிய முதியவர்மனிதநேய செயலுக்கு குடும்பத்தினருக்கு பாராட்டு

சிவகங்கை, ஆக.4-

சிவகங்கை மாவட்டம் மீனாட்சி நகரைச் சேர்ந்த தோழர் நா.முத்துசாமி (79) காலமானதைத் தொடர்ந்து, அவரது விருப்பப்படி அவரது உடலை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்காக அரசு சிவகங்கை மருத்துவக் கல்லூரிக்கு அவரது குடும்பத்தினர் நேற்று (03.08.2026) தானமாக வழங்கினர்.முதலாம் ஆண்டு மருத்துவக் கல்லூரி மாணவர்களின் கல்விக்கு பயனளிக்கும் வகையில் உடல் தானம் செய்யப்பட்ட இந்த மனிதநேய செயலுக்கு அரசு சிவகங்கை மருத்துவக் கல்லூரி முதல்வர் பாராட்டு தெரிவித்து, குடும்பத்தினருக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்கி கவுரவித்தார்.இந்நிகழ்ச்சியில் மருத்துவக் கல்லூரி துணை முதல்வர், நிலைய மருத்துவ அலுவலர்கள், பேராசிரியர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியதுடன், உடல் தானம் குறித்த விழிப்புணர்வை பொது மக்களிடையே ஏற்படுத்தும் வகையில் இந்த செயல் முன்னுதாரணமாக அமையும் என தெரிவித்தனர்.




# கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சி முக்கிய பகுதிகளில் அழகுப்படுத்திட நடவடிக்கை

கன்னியாகுமரி, ஆக.4-

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சியின் சார்பில் ஆட்சியர் அலுவலக அருகில் உள்ள வளைவு சாலை பகுதியினை சீர்படுத்தும் வகையில் அலங்கார செடிகள் நடும் பணியினை நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் ஆர்.ஐஸ்வர்யா, முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், துவக்கி வைத்து தெரிவிக்கை யில் மரம் நடுவோம் மழை பெறுவோம் என்ற உன்னதமான நோக்கத்துடன், நாகர்கோவில் மாநகராட்சியை மேலும் எழில்மிகு, தூய்மையான மற்றும் இயற்கை வளமிக்க மாநகரமாக மாற்றும் நோக்கில் விரிவான நகர்ப்புற பசுமையாக்கல் திட்டம் (Urban Greening Initiative) துவங்கப்பட்டுள்ளது. மாநகராட்சியின் பிரதான சாலை ஓரங்கள், பூங்காக்கள், பொது இடங்கள், அரசு அலுவலக வளாகங்கள் மற்றும் ஏரிக்கரைகளில் நிழல் தரும் மரங்கள் மற்றும் பயனுள்ள மரக்கன்றுகள் நடப்பட்டு வருகின்றன. பருவநிலை மாற்றத்தைச் சமாளிக்கவும், மழைப்பொழிவை அதிகரிக்கவும், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தவும் பொதுமக்கள் தங்கள் வீடுகளிலும், குடியிருப்புப் பகுதிகளிலும் குறைந்தபட்சம் ஒரு மரமாவது நட வேண்டும். பசுமையோடு இணைந்து தூய்மையைப் பேணும் வகையில், குப்பைகளைத் தரம் பிரித்து வழங்குதல், நெகிழி (பிளாஸ்டிக்) பயன்பாட்டை முற்றிலும் ஒழித்தல் மற்றும் "பிளாஸ்டிக் இல்லா நாகர்கோவில்" இலக்கை எட்டுவதற்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இத்திட்டம் வெறும் அரசு திட்டமாக மட்டும் இல்லாமல், பொதுமக்கள், தொண்டு நிறுவனங்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களை ஒருங்கிணைத்து ஒரு மக்கள் இயக்கமாக கொண்டு செல்ல வேண்டும். இயற்கை நமக்குக் கொடுத்த கொடை நாகர்கோவில். அதன் பசுமையைப் பாதுகாத்து, எதிர்காலத் தலைமுறைக்கு ஒரு தூய்மையான, ஆரோக்கியமான காற்றையும் சூழலையும் வழங்குவது நமது கடமை. 'பசுமை நகரம்! தூய்மை நகரம்!' நிலையான எதிர்காலம்!' என்ற இலக்கை அடைய நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட மக்கள் அனைவரும் மாநகராட்சியுடன் இணைந்து மரக்கன்றுகளை நட்டு பராமரிக்க வேண்டும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் .மு.பிரதாப், தெரிவித்தார்.

# அகில இந்திய கராத்தே போட்டியில் மானாமதுரை மாணவர்கள் அசத்தல் பல பதக்கங்களை வென்று மானாமதுரைக்கு பெருமை சேர்த்தனர்



மானாமதுரை, ஆக.4-

கர்நாடக மாநிலம் மைசூரில், இந்தியா சிட்டோ ரியு கராத்தே சங்கம் சார்பில் சாமுண்டி உள் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற அகில இந்திய அளவிலான கராத்தே போட்டியில், சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நாகர்ஜுன் சிட்டோ ரியு கராத்தே பள்ளி மாணவர்கள் சிறப்பாக பங்கேற்று பல்வேறு பதக்கங்களை வென்று மானாமதுரைக்கு பெருமை சேர்த்துள்ள னர்.போட்டியின் 12 வயதுக்குட்பட்ட பிரிவில், ஜெகத் அரிக் கட்டா பிரிவில் முதலிடம் பெற்று தங்கப் பதக்கத்தையும், சண்டைப் பிரிவிலும் முதலிடம் பெற்று மேலும் ஒரு தங்கப் பதக்கத்தையும் வென் றார்.10 வயதுக்குட்பட்ட பிரிவில், ஸ்ரீபரணவ் கட்டா பிரிவில் இரண்டாம் இடம் பெற்று வெள்ளிப் பதக்கமும், சண்டைப் பிரிவில் மூன்றாம் இடம் பெற்று வெண்கலப் பதக்கமும் வென்றார்.11 வயதுக்குட்பட்ட பிரிவில், சிஜித் கட்டா பிரிவில் இரண்டாம் இடம் பெற்று வெள்ளிப் பதக்கமும், சண்டைப் பிரிவில் மூன்றாம் இடம் பெற்று வெண்கலப் பதக்கமும் கைப்பற்றினார்.14-15 வயதுக்குட்பட்ட பிரிவில், டிவின் ராஜ் கட்டா பிரிவில் இரண்டாம் இடம் பெற்று வெள்ளிப் பதக்கம் வென்றார்.இந்த வெற்றிக்காக மாணவர்களை தயார்படுத்திய கராத்தே பயிற்சியாளர் நாகர்ஜுன் பாராட்டுகளைப் பெற்றார். அகில இந்திய அளவிலான போட்டியில் பதக்கங்கள் வென்று மானாமதுரைக்கு பெருமை சேர்த்த மாணவர் களையும், அவர்களது பயிற்சியாளரையும் பெற்றோர்கள், பொதுமக்கள் மற்றும் கராத்தே ஆர்வலர்கள் மனமார வாழ்த்தி வருகின்றனர்.

# தேசிய அளவிலான அபாகஸ் போட்டியில் மானாமதுரை யூஸிமேக்ஸ் மாணவர்கள் அசத்தல்



மானாமதுரை, ஆக.4-

சென்னையில் நடைபெற்ற தேசிய அளவிலான அபாகஸ் போட்டியில் சிவகங்கை மாவட்டம் மானாமதுரை யூஸிமேக்ஸ் பயிற்சி மைய மாணவர்கள் பல்வேறு பிரிவுகளில் சிறப்பான வெற்றி பெற்று மானாமதுரைக்கு பெருமை சேர்த்துள்ளனர். யூஸிமேக்ஸ் அபாகஸ் இந்தியா நெட்வொர்க்ஸ் நிறுவனம் சார்பில் நடைபெற்ற இப்போட்டியில், மானாமதுரை யூஸிமேக்ஸ் பயிற்சி மையத்திலிருந்து 52 மாணவர்கள் கலந்து கொண்டனர்.போட்டியில் 10 மாணவர்கள் சூப்பர் சாம்பியன் பட்டத்தையும், 10 மாணவர்கள் சாம்பியன் பட்டத்தையும், 20 மாணவர்கள் முதல் பரிசையும், 10 மாணவர்கள் இரண்டாம் பரிசையும் வென்றனர். மேலும், 2 மாணவிகள் அபாகஸ் பட்டயச் சான்றிதழ் பெற்றனர்.இந்நிகழ்ச்சி யூஸிமேக்ஸ் அபாகஸ் இந்தியா நெட்வொர்க்ஸ் நிறுவனத்தின் நிறுவனர் எஸ். ஜெஸ்டின் தலைமையில் நடைபெற்றது.விழாவில் மானாமதுரை யூஸிமேக்ஸ் பயிற்சி மைய இயக்குநர் முல்லை பி.டி. பிரபு, ஆசிரியர் சத்யா, மாணவர்களின் பெற்றோர் உள்ளிட்டோர் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களை பாராட்டி வாழ்த்தினர். இந்த வெற்றியின் மூலம் மானாமதுரை யூஸிமேக்ஸ் பயிற்சி மைய மாணவர்கள் தேசிய அளவில் தங்களது திறமையை நிரூபித்ததுடன், மானாமதுரைக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.



## சந்தைப்பேட்டை கழிவுநீர் ஏற்று நிலையத்தில் திடீர் ஆய்வு

# குப்பைகளை தரம் பிரித்து வழங்க வேண்டும்: பொதுமக்களுக்கு மாநகராட்சி ஆணையாளர் அறிவுறுத்தல்

மதுரை, ஆக.4-

மதுரை மாநகராட்சி மண்டலம் ஸ்ரீ 4 க்கு உட்பட்ட சந்தைப்பேட்டை தலைமை கழிவுநீர் ஏற்று நிலையத்தின் செயல்பாடுகளை மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயகுமார் திங்கள்கிழமை நேரில் ஆய்வு செய்து, சுகாதாரப் பணிகளை மேலும் தீவிரப்படுத்த அதிகாரிகளுக்கு பல்வேறு அறிவுறுத்தல்களை வழங்கினார். ஆய்வின்போது, கர்டர் பாலம், மெய்யப்பன் தெரு, தாவிட்டுச் சந்தை, தைக்கால் தெரு, தானப்ப முதலித் தெரு, மேலமாரட் வீதி, பெரியார் பேருந்து நிலையம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வரும் கழிவுநீர் வெள்ளக்கல் சுத்திகரிப்பு நிலையத்திற்கு தடையின்றி சென்றடைவது குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.தொடர்ந்து, மாநகராட்சி ஊழியர்கள் வீடுகளில் இருந்து



சேகரிக்கும் குப்பைகளை பொதுமக்கள் மக்கும், மக்காத குப்பைகளாக தரம் பிரித்து வழங்க வேண்டும் என அறிவுறுத்தினார். இதன்மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் சிறப்பாக நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.மேலும், குடிநீர் சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என்றும், குடிநீர் குழாய்களில் பழுது ஏற்பட்டால் உடனடியாக சரிசெய்ய நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.இதனைத் தொடர்ந்து அண்ணா பேருந்து நிறுத்தத்தில் சேதமடைந்திருந்த பேருந்து நிழற்குடையை பார்வையிட்ட ஆணையாளர், அதை விரைந்து சீரமைக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இந்த ஆய்வின்போது நகர திட்டமிடுநர் முரளி, உதவி ஆணையாளர் மணிமாறன், உதவி பொறியாளர் இந்திராதேவி, சுகாதார அலுவலர் ராஜ் கண்ணன் உள்ளிட்ட மாநகராட்சி அதிகாரிகள் உடனிருந்தனர்.

# செங்கல்பட்டு மாவட்ட அளவிலான கண்காணிப்புக்குழுவில் உறுப்பினராக சேர விண்ணப்பங்கள் வரவேற்பு

செங்கல்பட்டு, ஆக.4-

செங்கல்பட்டு மாவட்டத்தில் அரசாணை நிலை எண்.174, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை நாள். 14.12.017 ஸ்ரீ ல் தெரிவிக்கப்பட்ட அறிவுரைகள் படி செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் படி ந.க.எண் 10/2021/கு. பொ.1 நாள்.17.06.2024 ன் படி செங்கல்பட்டு மாவட்ட மற்றும் வட்ட கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டது. அதன் படி மாவட்ட மற்றும் வட்ட அளவில் கண்காணிப்பு குழு உறுப்பினர்களின் காலம் 17.06.2026 அன்று நிறைவடைந்துள்ளதால் புதிய கண்காணிப்பு குழு உறுப்பினர்களை தேர்ந்தெடுத்து குழு அமைக்கப்பட உள்ளது. பொது விநியோகத் திட்டத்தின் பயன்கள் உரியவர்களை சென்றடைவதை உறுதி செய்திடும் வகையில் சமூக அக்கறையுடன் தன்னலமற்று செயல்படக்கூடிய நபர்களை கண்காணிப்புக் குழு உறுப்பினர்களாக தமிழ்நாடு உணவுப்பாதுகாப்பு விதிகள் 2017ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின் அடிப்படையில் வட்ட மற்றும் மாவட்ட அளவிலான கண்காணிப்புக்குழுக்களை அமைக்கப்பட உள்ளது. எனவே செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள செங்கல்பட்டு/ செய்யூர்/மதுராந்தகம்/ திருக்கழுக்குன்றம்/ திருப்போரூர் மற்றும் வண்டலூர் வட்டத்திற்குட்பட்ட நுகர்வோர் அமைப்புகள்/ பெருமைமிக்க நபர்கள்/அட்டவணை வகுப்பினர்/பழங்குடியினர், ஆதரவற்றோர்/ மாற்றுதிறனாளிகள்/ பெண்கள் மற்றும் கூட்டுறவு இயக்கங்களில் ஈடுபாடு கொண்டு வட்டம் மற்றும் மாவட்ட அளவிலான கண்காணிப்புக்குழுவில் உறுப்பினராக சேர விருப்பமுள்ள மற்றும் தகுதியுள்ள நபர்கள் வரும் 07.08.2026க்குள் கீழ்க்காணும் முகவரிக்கு தங்களது விண்ணப்பங்களை தபால் மூலம் அனுப்பிட கேட்டுக் கொள்ளப்படுகிறது. முகவரி மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலகம்சிப் பிளாக், மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,செங்கல்பட்டு.





# மொண்டியம்மன் நகர் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் 11ம் ஆண்டு ஆடி திருவிழா

மாதவரம், ஆக.4-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி மொண்டியம்மன் நகர் முத்துமாரியம்மன் தெருவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் 11ம் ஆண்டு ஆடிமாத திருவிழா ஆலய நிர்வாகிகள் மற்றும் கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கணபதி பூஜையுடன் பால்குடம் எடுத்தல், காப்புகட்டுதல், அம்மனுக்கு பால் உள்ளிட்ட பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து வண்ணமலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் அம்மன் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வானவேடிக்கைவுடன் திருவீதி உலா நடைபெற்றது. இதனைத்தொடர்ந்து கூழ்வார்த்தல், கும்பம் படையல்பூஜை, சுமங்கலி பூஜை போன்றவை வெகு சிறப்பாக நடைபெற்றது. இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் மற்றும் உபயதாரர்கள் சார்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கினர். இத்திருவிழாவிற்கு சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு நெய்தீபம் ஏற்றி, பொங்கல் வைத்து, அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் பக்தர்களுக்கு மங்கள பொருட்கள் பிரசாதமாக வழங்கப்பட்டது.






Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161